(R)Enquiry

Under Section 173 BNSS

FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8167291

1. District : மாவட்டம் Tiruppur | PS: காவல்நிலையம் VSAC | Year: ஆண்டு 2025 | FIR No.: மு.த.அ. எண் 8/2025/AC/TPR | Date: நாள் 08.10.2025

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act, 1988 as amended by the PC (Amendment) Act, 2018 | Sections பிரிவுகள்: 7

(ii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் First week of September 2025 | Date to : நாள் வரை 04.10.2025

Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் 17.30 hrs | Time to : நேரம் வரை 12.15 hrs

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 08.10.2025 | Time : நேரம் 17.15 hrs

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 08.10.2025 G.D. Vol II | Time : நேரம் 17.15 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Computer Tamil Typed

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் At about 50 km South East

Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி O/o. the Assistant Engineer, O&M INPDCL, Dharapuram North, Tiruppur.

(c) In case outside limit of this Police Station, then the Name of PS : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம் –

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் R. Sivasubramaniam | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் K.S. Ramasamy Gounder

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 60/2025 | (d) Nationality : நாட்டினம் Indian | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் –

Date of Issue : வழங்கப்பட்ட நாள் – | Place of Issue : வழங்கப்பட்ட இடம் –

(f) Occupation : தொழில் Agriculture | (g) Address : முகவரி S.F.No. 104/2, Anantha Vanam, Chinnakinar Village, Uchipathi Post, Dharapuram Taluk, Tiruppur

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars: (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

Tr. Jayakumar, Foreman, O/o. the Assistant Engineer, O&M, TNPDCL, Dharapuram North, Tiruppur.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் –

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்) —

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்) —

Separate Sheet attached

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

K. R. 02/10/2025

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
02.10.2025

15. Date & Time of despatch to the court
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் 02.10.2025

Name: பெயர் K. Sasilekha
Rank: நிலை Inspector of Police
VSAC, Tiruppur.

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. கனம் முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்ற நீதிபதி, முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருப்பூர் அவர்கள் முன்பாக

திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 8/2025/AC/TPR வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி...

திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் K.சசிலேகா ஆகிய நான் 08.10.2025- ம் தேதி மாலை 17.15 மணியளவில் அலுவலகத்தில் ஆஜரில் இருந்தபோது R.சிவசுப்பிரமணியம், த/பெ.ராமசாமி கவுண்டர், சர்வே எண்.104/2, ஆனந்தவனம், சிறுகிணர் கிராமம், இச்சிபட்டி அஞ்சல், தாராபுரம் தாலுகா, திருப்பூர் என்பவர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் ஆஜராகி கொடுத்த தமிழில் தட்டச்சு செய்யப்பட்ட புகாரின் விபரம் பின்வருமாறு அனுப்புநர். R.சிவசுப்பிரமணியம், த/பெ.ராமசாமி கவுண்டர், சர்வே எண்.104/2, ஆனந்தவனம், சிறுகிணர் கிராமம், இச்சிபட்டி அஞ்சல், தாராபுரம் தாலுகா, திருப்பூர், செல் நம்பர் 9842710045. பெறுநர் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்பு துறை, திருப்பூர். நான் திருப்பூர் மாவட்டம், தாராபுரம் தாலுகா, இச்சிபட்டி அஞ்சல், சிறுகிணர் கிராமம், சர்வே எண்.104/2 ஆனந்தவனம் தோட்டத்தில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்கிறேன். திருப்பூர் மாவட்டம், தாராபுரம் வட்டம், சிறுகிணர் கிராமம், க.ச.எண்.104/2-ல் 2.76 ஏக்கர் நிலம் எனது மனைவி சத்யபாமா பெயரில் உள்ளது. அந்த நிலத்தில் 2600 சதுரடியில் வீடு கட்ட அனுமதி வாங்கினோம். வீடு கட்டுவதற்கு தற்காலிக மின் இணைப்பு பெற தாராபுரம் - பொள்ளாச்சி சாலையில் நஞ்சியம்பாளையத்தில் உள்ள தாராபுரம் வடக்கு EB அலுவலகத்தில் கேட்ட போது ஆன்லைனில் நில ஆவணங்களை சமர்ப்பித்து விண்ணப்பம் செய்ய சொன்னார்கள். நான் 17.9.2024 தேதி தாராபுரத்தில் உள்ள விஜய் ஜெராக்ஸ் என்ற கடையில் எனது மனைவி பெயரில் தற்காலிக மின் இணைப்புக்கு ஆன்லைனில் விண்ணப்பம் செய்தேன். அந்த விண்ணப்பத்துடன் நிலத்திற்கான பத்திரம், சிட்டா, அடங்கல், நில வரைபடம், ஆதார்கார்டு ஆகியவற்றை இணைத்தேன். எனது செல்போனுக்கு தற்காலிக மின் இணைப்புக்கான மீட்டருக்கான டெபாசிட் மற்றும் இதர கட்டணமாக ரூ.16,449/- ஐ

கட்ட மெசேஜ் வந்தது. நான் பணம் ரூ.16,449/- ஐ ஆன்லைனில் கட்டி ரசீது பெற்றேன். அதன்பிறகு தாராபுரம் வடக்கு EB அலுவலகத்திலிருந்து போர்மேன் திரு.ஜெயகுமார் என்பவர் இடத்தை பார்வையிட்டு சென்றார். பின்னர் தற்காலிக மின் இணைப்பு வழங்கினார்கள். 2025-ம் வருடம் ஆகஸ்ட் மாதம் வீட்டை கட்டி முடித்தேன். தற்காலிக மின் இணைப்பை வீட்டு மின் இணைப்பாக மாற்றம் செய்யவும், ஒரு மின்கம்பம் போட்டு மின் இணைப்பு வழங்கவும் 3.9.2025 தேதி விஜய் ஜெராக்ஸ் கடையில் ஆன்லைனில் விண்ணப்பம் செய்தேன். அந்த விண்ணப்பத்துடன் சம்பந்தப்பட்ட ஆவணங்களை இணைத்திருந்தேன். 3 நாட்கள் கழித்து மாலை சுமார் 5.30 மணியளவில் போர்மேன் திரு.ஜெயகுமார் அவர்கள் நிலத்திற்கு வந்தார். அப்போது நானும் எனது மனைவியும் இருந்தோம். அவர் நிலத்தை பார்த்துவிட்டு மின் கம்பம் போடுவதற்கான செலவுகளை நீங்களே செய்ய வேண்டும் என்று கூறினார். நான் அவரிடம் போல் போடுவதற்கு எவ்வளவு செலவாகும் என்று கேட்டேன். அதற்கு அவர் எஸ்டிமேட் சுமார் ரூ.25,000/- ஆகும் என்று சொன்னார். நான் அவரிடம் ஈபி பில் அதிகமாக வருகிறது. சீக்கிரமாக வீட்டு மின் இணைப்பாக மாற்றி கொடுங்கள் என்று கேட்டேன். அதற்கு அவர் எஸ்டிமேட் தயார் செய்து AD - க்கு அனுப்ப வேண்டும். எஸ்டிமேட் தயார் செய்ய தனக்கு தனியாக ரூ.3,000/- கொடுங்கள் என்று கேட்டார். AD அப்ரூவல் செய்தால் தான் மின் கம்பம் போடுவார்கள் என்று கூறி நீங்கள் AD - யை பாருங்கள் என்று சொன்னார். நான் சரி பார்க்கலாம் என்று கூறினேன். 8.9.2025 தேதி மாலை நான் எனது செல்போனிலிருந்து போர்மேன் ஜெயகுமார் அவர்களது செல்போன் எண் 9965129182-க்கு தொடர்பு கொண்டு போல் போடுவதற்கான ரெஜிஸ்ட்ரேசன் பீஸ் கட்டுவதற்காக கேட்ட போது போன் இணைப்பு கட்டானது. உடனே அவர் எனது செல்போனுக்கு அழைத்து லிங்க்கை அனுப்புவதாக சொல்லி அனுப்பினார். நான் 9.9.2025 தேதி பணம் ரூ.220/- கட்டினேன். நான் மின் இணைப்பு மற்றும் போல் போடுவது சம்பந்தமாக போர்மேன் அவர்களை செல்போனில் தொடர்பு கொண்டபோது அவர் அலுவலகம் வந்து பார்க்க சொன்னார். எனக்கு வேலைகள் இருந்ததால் அவரை அலுவலகம் சென்று பார்க்கவில்லை. 4.10.2025 தேதி காலை சுமார் 11.15 மணியளவில் எனது செல்போனிலிருந்து போர்மேன் ஜெயகுமார் அவர்களது செல்போன் எண் 9965129182-க்கு தொடர்பு கொண்டு மின் இணைப்பு

சம்பந்தமாக பேசிய போது அலுவலகம் வர சொன்னார். நான் சுமார் 12.00 மணியளவில் தாராபுரம் AE அலுவலகம் சென்ற போது போர்மேன் இல்லை. உடனே நான் எனது செல்போனிலிருந்து போர்மேன் செல்போனுக்கு தொடர்பு கொண்ட போது DE அலுவலகத்தில் மீட்டிங்கில் இருப்பதாகவும் 10 நிமிடத்தில் வந்து விடுவதாக சொன்னார். நான் அலுவலகம் முன்பு காத்திருந்தேன். சிறிது நேரம் கழித்து போர்மேன் வந்தார். நான் அவரை அலுவலகத்திற்கு வெளியே வைத்து பார்த்த போது அவர் எஸ்டிமேட் தயார் செய்து AD அலுவலகம் அனுப்பி விட்டதாகவும், AD-யை போய் பாருங்கள், AD-யை பார்த்தால் தான் எஸ்டிமேட் தொகை சரியாக தெரியும் என்றும் தான் ஏற்கெனவே கேட்ட பணம் ரூ.3,000/-த்தை கொடுத்துவிடுங்கள். இந்த அமவுண்டை கொடுத்தால் தான் உயரதிகாரிகளிடம் சொல்லி சீக்கிரமாக மின் இணைப்பு வழங்க ஏற்பாடு செய்வேன் என்று சொன்னார். எனக்கு பணம் ரூ.3,000/- லஞ்சமாக தாராபுரம் வடக்கு, EB போர்மேன் திரு.ஜெயகுமார் அவர்களுக்கு கொடுக்க விருப்பமில்லை. எனவே எனது மனைவி சத்யபாமா பெயரில் உள்ள வீட்டுக்கு தற்காலிக மின் இணைப்பிலிருந்து வீட்டு மின் இணைப்பாக மாற்றவும், மின் கம்பம் போட்டு மின் இணைப்பு வழங்க எஸ்டிமேட் தயார் செய்வதற்கு உண்டான வேலைகளை செய்து உயரதிகாரிகளுக்கு அனுப்புவதற்கும் லஞ்சம் கேட்கும் போர்மேன் திரு.ஜெயகுமார் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். Sd/-xxxx K.R.Sivasubramaniam 08/10/2025. Sir, Received the complaint on 08.10.2025 at 17.15 hrs and made preliminary verification between 17.15 hrs and 17.45 hrs after getting approval from DVAC, Chennai and registered a case in Tiruppur V&AC Cr.No.8/2025/AC/TPR u/s 7 of the Prevention of Corruption Act, 1988, as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 on 08.10.2025 between 17.45 hrs to 18.45 hrs. Sd/- xxxx (K.Sasilekha). 08/10/2025 Inspr. V&AC, TPR.

Original FIR along with original complaint of R.Sivasubramaniam, S/o.Ramasamygounder, Survey No.104/2, Ananthavanam, Chirukinar

Village, Itchipatti Post, Dharapuram Taluk, Tiruppur is submitted to the Hon'ble Principal District and Sessions Judge, Principal District and Sessions Court, Tiruppur and a copy of FIR is submitted to the Director, Vigilance and Anti-Corruption, Chennai.

(K.Sasilekha),
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Tiruppur. 08.10.2025